மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 122, 123 ஆகியவை கடைசியில் எடுத்துக் கொள்ளப்படும்.

வினா எண். 124, 125 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பெறுகின்றன.

" டயோஸ்கோரியா " மூலிகை வளர்க்கும் திட்டம்.

*வினா எண். 126—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழ்நாட்டில் டயோஸ்கோரியா என்ற மூலிகை வளர்க்கும் திட்டம் ஏதேனும் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் என்றால், எங்கு எவ்வளவு தொகை செலவில் அமுல் செய்யப்படுகிறது /

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) ஆம்.

(ஆ) டயோஸ்கோரியா என்ற மூலிகை அரசு சின்கோனா துறையினரால் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருக்கும் சின்கோனாத் தோட்டத்தில் பயிரிடப்பட்டு வருகிறது.

மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 1978 முதல் 1982 வரையிலான நான்காண்டுகளில் ரூ. 80.27 இலட்சம் மூலதனத்தில் டயோஸ்கோரியா பயிரிடவும் அதிலிருந்து ஆண்டுக்கு 3 டன் டயோஸ்ஜெனின் தயாரிக்கவும் திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதியளித்துள்ளது.

திரு. ஓ. சுப்பிரமணியன் : டயஸ்கோரியா என்பது என்னவென்று புரியவில்லை. அதற்குத் தமிழில் பதம் இருந்தால் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : " டயோஸ்கோரியா " என்பது " டயோஸ்ஜெனின் " என்ற ஒரு மருந்தைத் தயாரிக்கப் பயிரிடப்படுகிற ஒரு கிழங்கு வகையாகும். அந்தக் கிழங்கில் இருந்து எடுக்கப்பட்ட டயோஸ்ஜெனின் இருதய நோய்க்கும் கருத்தடை மாத்திரைகள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

1980 பிப்ரவரி 13]

திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டது போல் ''டயோஸ்கோரியா'' என்பது ஏதோ '' பயாஸ்கோப் '' என்று சொல்லுவது போல் இருக்கிறது. அந்த மூலிகை தயாரிப்பதற்கான கிழங்கு வகையைப் பற்றி அமைச்சு செயலர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எந்த நாட்டைச் சேர்ந்த கிழங்கு வகை என்பதை அறிவிக்க இயலுமா ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): நம்முடைய நாட்டிலே தான் அந்த டயோஸ்கோரியா என்ற கிழங்கு வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதிலே இருந்து டயோஸ்ஜெனின் என்ற மருந்து தயாரிக்கப்படுகிறது. அது நம்முடைய நாட்டில்தான் தயாரிக்கப்படுகிறது.

திரு. க. மருதாசலம்: டயோஸ்கோரியா மருந்து எதற்குப் பயன்படுத்தப்படுகிறது ? இந்தத் திட்டத்தினால் எவ்வளவு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதற்கு இப்போதுதான் அமைச்சர் செயலர் பதிலளித்தார். அதையே திருப்பிக் கேட்டால் எப்படி ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு உறுப்பினரின் முதல் கேள்விக்கு ஏற்கனவே பதில் சொல்லிவிட்டேன். இந்தத் திட்டத்தினால் 350 தொழிலாளர்களும், 17 அலுவலர்களும் பயன் அடைவார்கள் என்று தெரிய வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: டயோஸ்கோரியா என்பது கர்ப்பத் தடைக்குப் பயன்படுத்தப்படுவதாக அமைச்சு செயலாளர் அவர்கள் சொன்னார்கள். அது பரிட்சார்த்தமாகச் சோதித்துப் பார்க்கப்பட்டதா ? வெற்றிகரமான நிலை ஏற்பட்டிருக்கிறதா ? கர்ப்பத்தை எத்தனை ஆண்டு காலத்திற்குத் தடுக்கக்கூடிய சக்தி இந்த மருந்துக்கு இருக்கிறது ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): எனக்குக் கிடைத்திருக்கிற தகவலை இங்கே சொல்லிவிட்டேன். மேற்கொண்டு தகவல் தேவைப்படுகிறவர்கள் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: டயோஸ்கோரியா என்ற மூலிகை மேற்கு தொடர்ச்சி மலையில் பயிரிடுவதற்குத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை அமைச்சரின்

பேரவைச் செயலர் ஏற்றுக் கொண்டார்கள். அதை முண்டந்துறை காடுகளில் அமலுக்குக் கொண்டுவர முயற்சி இருந்தது கைவிடப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் அமல் நடத்த அரசாங்கம் முன்வருமா ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப் படும்.

சென்னை மத்திய சிறையில் திரைப்படம் பிடிப்பு:

*வினா எண். 127—திரு. சென்னை மு. அரங்கநாதன் : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மத்திய சிறையில் தனிப்பட்ட திரைப்பட நிறுவனங்களுக்குச் சிறைச்சாலைக்குள் சென்று திரைப்படம் பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த திரைப்பட நிறுவனங்களுக்கு யாரால் அனுமதி வழங்கப்பட்டது ?

(இ) அப்படி திரைப்படம் பிடிக்கக் கட்டணம் வசூலிக்கப் படுகிறதா ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்: (அ), (ஆ) மற்றும் (இ) இது குறித்து * அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

[பிற்பகல் 9-10]

திரு. மு. சென்னை அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சிறைச்சாலையிலே உள்ள உள்பகுதிகளிலே இருப்பவைகளையெல்லாம் படம் பிடித்துக் காட்டுவதால், அது பொது மக்களுடைய உணர்வுகளைப் பாதிக்கிற அளவிலே—சில குற்றவாளிகளுக்கு உள்ளே இருக்கிற நிலைகளை வெளியே எடுத்துக் காட்டுகிற வகையிலே, குற்றம் செய்யும் மன நிலைக்குச் சாதகமாக சில நிலைமைகளை மனத்திலே பதிய வைக்கிற அளவுக்கு — வாய்ப்புக்கள் உருவாகும் என்பது அரசுக்குத் தெரியுமா? ஏற்கெனவே சிறைச்சாலையிலிருந்து வெளியே வர அந்தச் சுவரிலே எகிறிக் குதித்து வெளியே வந்த பல பிரச்னைகள் இருக்கின்றன. அப்படி இருக்குபொழுது, சிறைச்சாலையிலே உள்ளே எல்லா

* 609 பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சடிக்கப்பெற்றுள்ளது.